மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, சுற்றுலா பகுதிகள் அத்தனைக்கும் வைக்கப்படும் என்று குறிப்பு இருப்பதாக நான் சொல்லவில்லை. உதகமண்டலம் ஒரு சுற்றுலா இடமாக இருப்பதன் காரணமாக இந்த மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போன்று கொடைக்கானலும் இதுபோன்ற கண்காட்சி வைப்பதற்கு ஏற்ற இடம்தான். அதைப் பற்றிச் செயற்குறிப்பு இல்லை. யோசிக்கலாம்.

திரு. செ. செம்மலை: துணைத் தலைவர் அவர்களே. இந்த அரும் பொருள் காட்சி நிலையம் சேலம் மாவட்டத்தில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாவட்டம் தோரும் அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு செயற்குறிப்பு கல்வித் துறையிலே இருக்கிறது.

1981-1982ல் கொள்முதல் செய்யவிருக்கும் அரிசி, நெல் அளவு

*வினா எண். 162— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நடப்பாண்டில் (1981-1982ல்) கொள்முதல் செய்ய இருக்கும் அரிசி எவ்வளவு?

(ஆ) கொள்முதல் செய்ய உத்தேசித்திருக்கும் நெல் அளவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ)&(ஆ) நடப்பாண்டில் ஆறு இலட்சம் டன்கள் அரிசி கொள்முதல் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது இதை அடை வதற்கு அரசு தீவிரமாக கொள்முதல் செய்து வருகிறது.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, கொள்முதல் வெற்றிகரமாக நடப்பதற்கு இடையூறாக இருப்பது கொள்முதல் விலைதான். இந்த சர்க்கார், மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையை விட கூடுதலாக கொடுக்குமா என்று கேட்டபோது, மாண்புமிகு முன்னவர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சொன்ன பதில், மத்திய அரசு சொன்னதற்கு மீறிப்போனால், பிளாக் லிஸ்ட் பண்ணி

விடுவார்கள், ஆகவே எந்தத் திட்டத்திற்கும் பணம் கிடைப்பது கஷ்டம் என்று சொன்னார்கள். நான் கேட்க விரும்புவது, கர்நாடக மாநில அரசு-மத்திய அரசினுடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த அரசு அவர்கள் மேலே 10 ரூபாய் கூட்டிக் கொடுக்கிற போது, அவர்களை பிளாக் லிஸ்ட் பண்ணவில்லை. அப்படி இருக்கும்போது நாம் ஏன் அந்த கர்நாடக அரசு கொடுப்பதைப் போல, நம்முடைய விவசாயிகளுக்கு கூடுதல் பணம் கொடுக்காமல் இருக்க வேண்டும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி நான் ஏற்கனவே பலமுறை தெரிவித்து இருக்கிறேன், கொள்முதல் ரூ. 115 என்கிற அடிப்படையில் வாங்குவதற்குத் தான் ரிசர்வ் வங்கியும், மத்திய அரசும் நமக்குப் பணம் தருகிறது. மேற்கொண்டு கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அது மாநில அரசு நிதியில் இருந்து தான் தர வேண்டும். நம்முடைய மாநில அரசு கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று எண்ணினாலும், அதையும் தரக்கூடாது என்று மத்திய அரசும், ரிசர்வ் வங்கியும் வலியுறுத்துகிறார்கள். இப்போது கர்நாடக மாநிலத்தில் கொடுத்து விட்டார்களே தவிர, ரிசர்வ் வங்கி தருகின்ற அந்த ரூ. 615ஐத் தருவதற்குத் தகராறு இருந்து கொண்டு இருக்கிறது. இன்னும் தரவில்லை. இப்படிப் பட்ட இக்கட்டான நிலைமைகள் இருக்கின்ற காரணத்தால் தான் அந்த ரூ. 115 என்று வைத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் நாம் இப்போது ரூ. 10 அல்லது ரூ.15 கூடுதலாகக் கொடுத்தாலும், வெளிமார்க்கெட்டில் தற்போது ரூ.150, ரூ.155, மற்றும் ரூ.160 என்று இருப்பதால் எந்த விதமான பலனும் ஏற்படப்போவது இல்லை. ஆரம்பக் கட்டத்தில் வேண்டுமானால் அதற்கு வரவேற்பு இருந்து இருக்கலாம். ரூ.10 அதிகமாக கொடுப்பதில் இத்தகைய இடையூறுகள் இருப்பதால் தான் கொடுக்கவில்லை. கருநாடக மாநிலத்தில் கொடுத்துள்ளதால் ரிசர்வ் வங்கி இன்னும் அந்தப் பணத்தை ரிலீஸ் செய்யாமல் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மத்திய அரசு 6 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளதாக சொல்லப்பட்டது. இந்தக் கொள்முதலில் கடுமையான முறையில் அரசு ஈடுபட்டுள்ளதால் விவசாயிகள் மிகப்பெரிய பாதிப்புள்ளாகி இருக்கிறார்கள். வெளிக்கு மார்க்கெட்டில் ஒரு குவிண்டால் ரூ.150 முதல் ரூ.160 வரை விற்கிறது. அந்த விலைக்கே அரசு வங்கி, அரைவைக் கூலி, மற்ற செலவுகள் எல்லாம் ரூ.20 வைத்தாலும் கூட, ரூ. 160 பிளஸ், ரூ 20

என்று கணக்கிட்டாலும்—1½ குவிண்டால் நெல்லில் ஒரு குவிண்டால் அரிசி கிடைக்கும்—ஆகவே, ரூ255 தான் ஒரு குவிண்டால் அரிசியின் விலை வருகிறது. ஆக்வே ஒரு கிலோ அரிசி ரூ.2.55 என்கிற விலையில் அரசு மக்களுக்கு நியாயமான முறையில் வழங்கமுடியும். ஆகவே, இந்த மாதிரி ஒரு தகவலை மத்திய அரசுக்குத் தெரிவித்து, அவர்களின் ஒப்புதல் பெற்று, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவும், பொதுமக்களுக்கு நியாயமான விலையில் அரிசி கிடைக்கவும் அரசு முயற்சிகளை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு இது குறித்துத் தெளிவாக விளக்கியிருக்கிறேன். விவசாயிகளிடத்திலிருந்தோ அல்லது உற்பத்தியாளர்களிடத்தில் இருந்தோ நாம் எந்தவிதமான லெவியும் வாங்கவில்லை. மொத்த வியாபாரிகளிடத்தில் இருந்து தான் நாம் கொள்முதல் செய்கிறோம். நான் லெவிக்குக் கொடுக்கும் தொகை ரூ 115 தான் என்றாலும், விவசாயிகள் இந்த மொத்த வியாபாரிகளிடத்தில் கொடுக்கின்றபோது வெளி மார்க்கெட் விலையான ரூ.150 அல்லது ரூ 160 வரை பெற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இந்த விலைக்கு அந்த மொத்த வியாபாரிகள் வாங்கினாலும்; அரசாங்கத்திற்கு அவர்கள் ரூ.115க்குத்தான் கொடுக்கிறார்கள். இந்த இழப்பை அவர்களிடமுள்ள மீதி சரக்கை வெளி மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பனை செய்து கொள்வதன் மூலம் ஈடு செய்து கொள்ளமுடிகிறது. நான் அடிக்கடி எடுத்துச் சொல்வது போல், நமக்குக் கிடைக்கின்ற அடக்க விலையிலேயே 85 காசு குறைத்து ஒவ்வொரு கிலோவிற்கும் நாம் நியாயவிலைக்கடைகள் மூலம் வழங்க வேண்டிய நெருக்கடி இருக்கிறது. மத்திய அரசு 6 லட்சம் டன் கொள் முதல் செய்ய வேண்டும் என்று நிர்ணயித்துள்ளதற்குக் காரணம் இங்கேயிருக்கும் உற்பத்தி மற்றவைகளைக் கணக்கிட்டுத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப் போதுமான அளவிற்கு நாம் செய்யவில்லையென்றால், மத்திய அரசு இடத்திலே இருந்து இதே லெவி விலைக்கு அவர்களிடத்தில் வாங்கவேண்டும். ஆகவே தான் 6 லட்சம் டன் வசூலிக்கிறோம். விவசாயிகளைப் பொறுத்த வரையில் எந்தச் சங்கடமும் இல்லை. அப்படி எங்காவது சங்கடம் ஏற்பட்டு இருக்கிறது தனிப்பட்ட முறையில் என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்து இருக்கிறேன். வியாபாரிகளிடத்தில் இருந்து கூட, நம் எண்ணுகிற டார்கெட் அளவு முடிந்து விட்டால், கொள்முதல் செய்வதை, லெவி வசூலிப்பதை எடுத்து விடலாம் என்று கூட சொல்லியிருக்கிறேன்.

திரு செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, கொள்முதல் செய்யப்படுகின்ற நெல்லுக்கு கூடுதல் விலை கொடுக்கா விட்டாலும், வண்டிச் சத்தம் என்கிற முறையில் கூடுதலாக ஒரு

10 ரூ. கொடுக்க அரசு முன் வருமா? 1981—82-ல் கொள்முதல் செய்த நெல்லுக்கு அரிசியாக திருப்பிக்கொடுக்கிறபோது சிலருக்கு 25%க்கு மேல் கணக்கிட்டு தள்ளுபடி கொடுத்துள்ளதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே நான் முதலிலே குறிப்பிட்ட மாதிரி இந்த லெவி முறையிலே நம் தொடர்ந்து வசூலித்துக்கொண்டு வருகிறோம். கூடுதலாகக் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு ரிசர்வ் வங்கி செல்கிறது. அதற்கான காரணத்தையும் நான் விளக்கிக் காட்டினேன். இப்போது 10 ரூ. 15ரூ. அதிகமாக நாம் கொடுததாலும் கூட வெளி மார்க்கெட் விலை அதிகமாக இருப்பதால், அவர்கள் நம்மிடம் கொடுக்க ஆர்வம் காட்டமாட்டார்கள் என்று கருதுகிறேன். 25% தள்ளிக்கொடுக்கும் சூழ்நிலை இல்லை. ஈரப்பதம் ஓரளவிற்கு 22% வரை இருக்கலாம் என்று ஒப்புக்கொண்டு இருக்கிறோம். குறுவைப்பயிரில் மட்டும் விவசாயிகளுக்குக் கஷ்டம் இருக்கக்கூடாது என்பதற்காக மத்திய அரசிடம் சொல்லிவிட்டு, 25% ஈரப்பதம் வரை இருந்தால் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். தள்ளிக்கொடுக்கவில்லை என்பதைத் தெளிவுப்படுத்துகிறேன்.

தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் கோதுமையின் அளவு

*வினா எண் 163 திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) தமிழகத்திலுள்ள கோதுமை அரவை ஆலைகளுக்கு மத்திய அரசு ஒதுக்கும் கோதுமை எவ்வளவு?

(ஆ) கோதுமை கோட்டாவை எவ்வளவு உயர்த்துமாறு மாநில அரசு கோரியுள்ளது?

(இ) மத்திய அரசின் பதில் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: (அ) தமிழகத்திலுள்ள கோதுமை உருளை மாவு ஆலைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கென மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள் கோதுமையை வழங்கி வருகிறது.

(ஆ) கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு வழங்கும் கோதுமையின் அளவை மாதம் ஒன்றுக்கு 50,000 டன்களாக உயர்த்துமாறு இவ்வரசு தொடர்ந்து கேட்டுவருகிறது.

(இ) மத்திய அரசு நம் கோரிக்கையை ஏற்க இயலாது எனத் தெரிவித்து விட்டது.